அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 39/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைக..
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1989, ஆகஸ்ட் 9 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

## வார இறுதி நாட்களிலும் அரசாங்க விடுமுறை நாட்களிலும் பணியாற்றுவதற்கான கொடுப்பனவு.

தாபன விதிக்கோவையின் 10:1 ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள அதே ஊதிய அடிப்படையில் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10:2ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பங்களை அங்கீகரிப்பதற்கு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகின்றது. அத்தகைய அங்கீகாரம் 1985, செப்டெம்பர் 5ஆந் திகதியிட்ட 305ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2ஆம் பிரிவிலும் 1989, மார்ச் 23ஆந் திகதியிட்ட 19/89ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் தொடர்புடைய பிரிவுகளிலும் திருத்தப்பட்டவாறான 1984, யூன் 12ஆந் திகதியிட்ட எனது 256ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2ஆம் பிரிவில் சுருக்கித் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக வழங்கப்படல் வேண்டும்.

02. 10:2ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் சகல கொடுப்பனவுகளுக்குமான இடாப்பொன்று தொடர்புடைய பிரவேசங்களுக்கிடையே அமைச்சின் செயலாளருடைய அங்கீகாரத்தையும் குறிப்பிட்டு பேணப்படல் வேண்டும். இந்த இடாப்பு தாபனப் பணிப்பாளரிடம் அல்லது அவரினால் பரிசோதனைக்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்: சிறில் கமகே.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.